# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தேர்தல் பணிக்குழு!

1. திரு.டி.எம்.செல்வகணபதி எம்.பி. (சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், தி.மு.க)
2. திரு.இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. (தொகுதி பார்வையாளர், தி.மு.க)
3. திரு.கொளத்தூர் த.செ.மணி (மாநில தலைவர், திராவிடர் விடுதலை கழகம்)
4. திரு.எம்.எம். ரத்தினவேல் (சேலம் மேற்கு மாவட்ட தலைவர், காங்கிரஸ்)
5. திரு.கே. சுரேஷ்பாபு (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், தே.மு.தி.க)
6. திரு.ஏ.மோகன் (மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட்)
7. திரு.எ.இராமமூர்த்தி (மாவட்ட செயலாளர், மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட்)
8. திரு.ந.மகேந்திரவர்மன் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், ம.தி.மு.க)
9. திரு.மூஸா (மாவட்ட தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்)
10. திரு.அப்துல் அக்கீம் (மாவட்ட தலைவர், மனிதநேய மக்கள் கட்சி)
11. திரு.பி.ராஜ்குமார் (சேலம் புற நகர் மாவட்ட செயலாளர், கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி)
12. திரு.கா.நா.பாலு (மாவட்ட தலைவர் திராவிடர் கழகம்)
13. திரு.டி.ஷரிப் பாஷா (சேலம் மேற்கு மாவட்ட தலைவர், SDPI
14. திரு.ஸ்ரீதரன் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், ஆதி தமிழர் பேரவை)
15. திரு.அம்ஜீத் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், மனித நேய ஜனநாயக கட்சி)
16. திரு.கே.சரவணன் (மாவட்ட செயலாளர், மக்கள் நீதி மய்யம்)

### எடப்பாடி தொகுதி தேர்தல் பணிக்குழு

1. திரு.அ.த.சம்பத்குமார் (மாவட்ட கழக துணை செயலாளர், தி.மு.க)
2. திரு.நா.முருகவேல் (மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர், தி.மு.க) எடப்பாடி தொகுதி பார்வையாளர்
3. திரு.பி.ஏ. முருகேசன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர், தி.மு.க)
4. திரு.பி.சந்திரன் (சேலம் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர், தி.மு.க)
5. திரு.எஸ். சுப்பிரமணி (முன்னாள் பொதுக்குழு உறுப்பினர், தி.மு.க)
6. திரு.A.முரளி (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், காங்கிரஸ்)
7. திரு.A.பாலாஜி (மாவட்ட துணை செயலாளர், தே.மு.தி.க)
8. திரு.சே.பா.ஆறுமுகம் (எடப்பாடி தொகுதி மாவட்ட செயலாளர், வி.சி.க)
9. திரு.பழ. ஜீவானந்தம் (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், இந்தியக் கம்யூனிஸ்ட்)
10. திரு.K. ராஜாத்தி (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்)
11. திரு.R.மாரியப்பன் (மாவட்ட துணை செயலாளர், ம.தி.மு.க.)
12. திரு.சையது முஸ்தபா (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்)
13. திரு.அமீர் பாஷா (எடப்பாடி நகர தலைவர், மனித நேய மக்கள் கட்சி)
14. திரு.எல்.கே.கே.கந்தசாமி (சேலம் புறநகர் மாவட்ட தலைவர், கொங்கு நாடு மக்கள் கட்சி)
15. திரு.கோ.வி.அன்புமதி (தலைவர் மாவட்ட பகுத்தறிவாளர் கழகம், திராவிடர் கழகம்)
16. திரு.புரோஸ்கான் (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், SDPI)
17. திரு.ரஃபி (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், மனித நேய ஜனநாயக கட்சி)
18. திரு.ரவிசுப்ரமணியன் (மாவட்ட தலைவர், ஆதிதமிழர் பேரவை)
19. திரு.எஸ்.பி.குமரன் (எடப்பாடி தொகுதி பொறுப்பாளர், மக்கள் நீதி மய்யம்)

### சங்ககிரி தொகுதி தேர்தல் பணிக்குழு

1. திரு.பி.தங்கமுத்து (மாவட்ட கழக அவைத்தலைவர், தி.மு.க.)
2. திரு.க.சுந்தரம் (மாவட்ட கழக துணை செயலாளர், தி.மு.க.)
3. திரு.க.பிரபுகஜேந்திரன் (மாநில இளைஞர் அணி துணை செயலாளர், தி.மு.க) தொகுதி பார்வையாளர்
4. திரு.ஆர்.பி. செந்தில்குமார் (மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர், தி.மு.க) சங்ககிரி தொகுதி பார்வையாளர்
5. திரு.ஜெ.எஸ்.ஜெயக்குமார் (முன்னாள் மாவட்ட தலைவர்) சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், காங்கிரஸ்
6. திரு.ஏ.ஆர்.தங்கமணி (சேலம் மேற்கு மாவட்ட கழக பொருளாளர், தே.மு.தி.க)
7. திரு.க.அருள்பிரகாஷ் (சங்ககிரி தொகுதி மாவட்ட செயலாளர், வி.சி.க)
8. திரு.சி.சிட்டு (சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், இந்தியக் கம்யூனிஸ்ட்)
9. திரு.ஏ.ஆறுமுகம் சங்ககிரி தொகுதி பார்வையாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
10. திரு.எஸ்.சுந்தரமூர்த்தி (மாவட்ட அவைத்தலைவர், ம.தி.மு.க)
11. திரு.அத்தாவுல்லா (சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்)
12. திரு.டி.முகம்மது (மாவட்ட துணை செயலாளர், மனித நேய மக்கள் கட்சி)
13. திரு.கே.சரவணன் (சேலம் தெற்கு மாவட்ட செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி)
14. திரு.ப.எழில் (மாவட்ட மகளிர் அணி தலைவர், திராவிடர் கழகம்)
15. திரு.ஜாமால் முகமது (சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், SDPI)
16. திரு.ஏ.இப்ராஹீம் (சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், மனிதநேய ஜனநாயக கட்சி)
17. திரு.மாரிமுத்து (மாவட்ட அமைப்பு செயலாளர், ஆதிதமிழர் பேரவை)
18. திரு.ஜெ.எஸ்.லோகேஸ்வரன் (சங்ககிரி தொகுதி பொறுப்பாளர், மக்கள் நீதி மய்யம்)

### மேட்டூர் தொகுதி தேர்தல் பணிக்குழு

1. திரு.பா. கோபால் Ex. MLA (முன்னாள் மாவட்ட அவைத்தலைவர், தி.மு.க)
2. திருமதி.அ.ரியா (மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர், தி.மு.க) மேட்டூர் தொகுதி பார்வையாளர்
3. திருமதி.எஸ்.எலிசபத்ராணி (மாவட்ட கழக துணை செயலாளர், தி.மு.க)
4. திரு.பி.பொன்னுசாமி (மாவட்ட கழக பொருளாளர், தி.மு.க)
5. திரு.மு.ராமநாதன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர், தி.மு.க)
6. திரு.கே.பி.என்.மகேஷ் (மேட்டூர் தொகுதி பொறுப்பாளர், காங்கிரஸ்)
7. திரு.எம்.ஆர்.எஸ்.செல்வராஜ் (மாவட்ட அவைத்தலைவர், தே.மு.தி.க)
8. திரு.மெய்யழகன் (மேட்டூர் தொகுதி மாவட்ட செயலாளர், வி.சி.க)
9. திரு.கே.வி.ராஜேந்திரன் (மேட்டூர் தொகுதி பொறுப்பாளர், இந்தியக் கம்யூனிஸ்ட்)
10. திருமதி.K.வசந்தி (மேட்டூர் தொகுதி பார்வையாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்)
11. திரு.ப.ரவிக்குமார் (மாவட்ட துணை செயலாளர், ம.தி.மு.க.)
12. திரு.ஜெய்லாப்தீன் (மேட்டூர் தொகுதி பொறுப்பாளர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்)
13. திரு.ஆ.காதர்பாஷா (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், மனித நேய மக்கள் கட்சி)
14. திரு.எஸ்.சிவக்குமார் (கொளத்தூர் ஒன்றிய செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி)
15. திரு.இரா.கலையரசன் (நகர தலைவர், மேட்டூர், திராவிடர் கழகம்)
16. திரு.பைரேஸ் (மேட்டூர் தொகுதி பொறுப்பாளர், SPDI)
17. திரு.சுதாகர் (சேலம் வடக்கு மாவட்ட செயலாளர், ஆதிதமிழர் பேரவை)
18. திரு.பி. ரஞ்சித் (மேட்டூர் தொகுதி பொறுப்பாளர், மக்கள் நீதி மய்யம்)

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.,**
செயலாளர் - சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.



குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கே.எம்.ராஜு மேலூர் ஒன்றியத்துக்குட்பட்ட மூப்பர்காடு பழனியப்பா எஸ்டேட், மானார் முசாபுரி, கொலக்கம்பை, தைமலை, மேலூர் காசோலை ஆறு குச்சி அரைகட்டி கிரேட் மோர் தூதூர்மட்டம் ஆகிய பகுதிகளில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் பெள்ளி, மேலூர் ஒன்றியச் செயலாளர் ஏ.டி.லாரன்ஸ் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகளான பி.எஸ்.கே.கார்த்திக், எம்.எஸ்.பாலசுப்பிரமணியம், பாலன், முருகேஷ், மோகன், அழகு, அசி மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வெற்றிபெறச் செய்வீர்!

## அனைத்து தொழிற்சங்கங்கள் வேண்டுகோள்!

சென்னை, ஏப். 10 –

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் 23 அன்று நடைபெற இருக்கிறது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கவும், இக்கூட்ட ணியை வெற்றிபெறச் செய்யவும் தமிழ்நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அனைத்து தொழிற்சங்கங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: –

மூன்றாவது முறையாக ஒன்றிய அரசை ஆர்எஸ்எஸ் பிஜேபி கைப்பற்றியதற்கு பின்பு, இந்தியாவை தனது ஒற்றைப் பரிமாண இந்துத்துவ சர்வாதிகாரத்தின் கீழ் கொண்டு வரும் இலக்கை நோக்கி வேகமாக நடைபோடுகிறது.

அரசியல் அமைப்பு சட்டம் வகுத்தளித்த மாநிலங்களின் ஒன்றியம் என்ற கூட்டாட்சி முறைமையை சீர்குலைக்க அனைத்து வகையான முயற்சிகளையும் எடுத்து வருகிறது. தமிழ்நாட்டின் மீது வன்மம் கொண்டு, நமது பெருமைக்குரிய மாநிலத்தைச் சுற்றி பாசிச சதி வலை பின்னி வருகிறது. இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு உறுதியாக போராடி வருகிறது.

ஒவ்வொரு மாநிலமாக, அது பல்வேறு தகிடுதத்தங்களை செய்து விழுங்கி வருகிறது. மாநிலங்களுக்கு எந்த உரிமையும் இல்லை, அதிகாரங்கள் அனைத்தும் மையத்தில் மட்டுமே குவிக்கப்படும் ஆபத்து பெருகி வருகிறது.

இந்தியாவில் பொருளாதாரத்தில் முதன்மை பங்கு வகிக்கிற, கல்வி, தொழில், சமூக முன்னேற்றத்தில் முன்னிலை யில் இருக்கும் தமிழ்நாடு திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்படுகிறது!

தமிழ்நாட்டின் மாணவர்களின் கனவுகளை உடைக்கிற கொடூர கருவியாக நீட் தேர்வை அது கையிலேந்தி இருக்கிறது. ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் என்ற போர்வையில், அது புதிய புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, திட்டமிட்டு இந்தி மொழியை திணிக்கிறது.

தமிழ் மொழி வளர்ச்சியை, அதன் யாவரும் கேளிர் எனும் பண்பாட்டை, அகழாய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அதன் தொன்மையை வேண்டுமென்றே கொடூர மதி கொண்டு நிராகரிக்கிறது.

உற்பத்தி மாநிலமான தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் ஜிஎஸ்டி வரியை, அதற்குரிய பங்கீட்டைக் கூட வழங்கா மல் மையத்துக்கு கொண்டு செல்கிறது. கல்விக்கான நிதி, இயற்கை பேரிடர்களுக்கான நிதி வழங்க மறுத்து சிக்கலை ஆழப்படுத்தி, பொருளாதார அநீதி இழைக்கிறது.

தனது கருத்தியல் முகவராக ஆளுநரை நியமித்து, சட்டங்களுக்கு அனுமதி மறுக்கிறது. தமிழ்நாட்டின் சட்டப் பேரவையை அதன் பணியைச் செய்யவிடாமல் தடுக்கிறது. ஆளுநர் மூலம் போட்டி அரசை நடத்துகிறது.

தன்னாட்சி அமைப்புகளான, மத்திய புலனாய்வுத் துறை, வருமான வரித்துறை அமலாக்கத்துறை ஆகியவற்றை, தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக ஏவி, தன்னுடைய விருப்பங்களை கொஞ்சமும் கூச்சமின்றி நிறைவேற்றிக் கொள்ள அது தயங்குவதில்லை.

எதிர்க்கட்சிகளை மிரட்ட, மாநில அரசுகளை கட்டுப்படுத்த, அரசியல் ஆயுதமாக இந்த அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் மீனவர்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்து பரிதவிக்கும் போது, கொலை செய்தவர்களின் தோள் மீது கை போட்டு ஒன்றிய அரசு குலாவுகிறது.

விவசாயிகள் தொழிலாளர்கள் உழைக்கும் மக்களின் குரல் அதன் காதுகளில் விழுவதே இல்லை. கார்ப்பரேட் சக்திகளின் நலனுக்காக, மோடியின் குஜராத்தி நண்பர்களை உயரமாக்குவதற்காக சாமானியர்களைக் கசக்கிப் பிழிகிறது.

இது அரசியல் சாசனம் வரைந்து தந்துள்ள கூட்டாட்சியின் பாதை அல்ல. இது மைய ஆதிக்கத்தின் பாதை; மாநில உரிமையை ஒடுக்கும் பாதை; ஜனநாயகத்திற்கு எதிரான பாதை.

தொழிலாளர்களுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பெரும் இன்னல்களை இழைத்து வருகிறது. நான்கு தலைமுறைகளாக போராடி பெற்ற வேலை பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ஆகியவை முற்றாக பறிக்கப்படுகின்றன. இதற்கு ஏற்ற வகையில் தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டு நான்கு சட்டத் தொகுப்புகள் ஆக்கப்பட்டன.

தொழிலாளர் நலன் ஒத்திசைவு பட்டியலில் உள்ள நிலையில் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநில அரசுகள் இது வரை இந்த சட்டத் தொகுப்புகள் அனைத்திற்கும் விதிகள் உருவாக்கி அறிவிக்கைகள் வெளியிடவில்லை. தமிழ்நாடு அரசு வரைவு விதிகள் வெளியிட்டாலும், தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தும் அறிவிக்கை வெளியிடாமல் நிறுத்தி வைத்து உள்ளது. அதோடு தொழிற்சங்கங்களின் கருத்தறிந்து அவர்களின் ஒப்புதல் இன்றி வெளியிட மாட்டோம் என்று தமிழ்நாடு அரசு உறுதிபட தெரிவித்தது.

இந்த நிலையில் 2025 நவம்பர் 21 ஆம் தேதியன்று ஒன்றிய அரசு நான்கு சட்டத் தொகுப்புகளும் நாடு முழுவதும் அமுலுக்கு வந்து விட்டது என்று அறிவிக்கைகள் வெளியிட்டு உள்ளது. டிசம்பர் 30 ஆம் தேதியன்று வரைவு விதிகளையும் வெளியிட்டு உள்ளது. விதிகளை இறுதி செய்து 2026 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அமுல்படுத்தப்பட்டதாக ஒன்றிய அரசு மூர்க்கத்தனமாக அறிவித்து உள்ளது.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை இந்தியா கூட்டணி கட்சிகள் முழுமையாக எதிர்த்து உள்ளன. நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. நாடாளுமன்ற வளாகத் தில் இந்தியா கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். திமுகழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழக அரசு பல நலத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறது. தொழிலாளர் நலன், தனியார் மயமாக்கல் போன்ற சில பிரச்சனைகள் 8 மணி நேர வேலை அதிகரிப்பு, தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்துதல், போக்குவரத்து தொழிலாளர், தூய்மைப் பணியாளர், திட்டப் பணியாளர்கள், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் என்று பல முனைகளில், தொழிலாளர்கள் கோரிக்கைகள் கேட்கப்பட்டுள்ளது. சிலவற்றில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

ஆசிரியர் அரசுப் பணியாளர்களின் பழைய ஓய்வூதியம் எனும் கோரிக்கையை நிறைவேற்றுவது சம்பந்தமாக அந்த அமைப்பு களோடு பலசுற்று பேச்சுவார்த்தை நடத்தி; ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய ஓய்வூதியம், ஒருங்கிணைந்த ஒய்வூதியத்தை விட பாதுகாப்பான தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்றப்படாமல் இருக்கிற கோரிக்கைகளை வரும் காலங்களில் வாதாடி பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கைக்கு உரிய அரசாக திமுக அரசும், நமது மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மட்டுமே களத்தில் உள்ளது என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

திராவிட இயக்கத்தின் ஒரு கிளையாக துவங்கிய அதிமுக, கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விடுபட்டு. முற்றிலுமாக தடம் புரண்டு விட்டது.

அதிமுக, பாஜகவுடன் கைகோர்த்துள்ள நிலையில், இது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல; மாறாக, மாநில உரிமைகளைத் தாரைவார்க்கும் முயற்சி என்பது தெளிவாகி விட்டது. அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில், சிக்கியுள்ள வழக்குகளில் இருந்து தண்டனை கிடைத்து விடாமல் தப்பிப்பதற்கான திசையில், தனது சொந்த மாநிலத்தையே காவு கொடுக்க துணிந்து விட்டது.

இன்றைய சூழலில், மக்களுக்கு நேர் எதிரான, அரசியல் சட்டத்தைக் கூட மதிக்காத, மாநில உரிமைகளை மறுத்து நாட்டில், சர்வாதிகாரத்தை நிலை நாட்டும் வேட்கையோடு, தமிழ்நாட்டை வேட்டையாட வருகிற பாசிச மதவெறி சக்திகளிடமிருந்து மாநிலத்தைப் பாதுகாப்பதே முன்னுரிமையாக உள்ளது.

மதவெறிக்கும், சர்வாதிகாரத்துக்கும் எதிரான ஒரு மாற்றுக் குரலை உறுதி செய்ய, ஜனநாயக சமநிலையை உருவாக்க, திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தமிழ்நாட்டின் மக்கள் வாக்களித்து பெருவெற்றி பெறச் செய்ய வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதிக ளான அனைத்து தொழிற்சங்கங்களின் நிர்வாகி களும், தொழிலாளர்களும் தமிழ்நாட்டின் வாக்காளர்கள் அனைவரிடமும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தமிழ்நா ட்டின் மக்கள் வாக்களித்து பெருவெற்றி பெறச் செய்ய வேண்டிய அவசியத்தை விளக்கி விரிவான தேர்தல் பரப்புரை செய்யவும், களப்பணியாற்றிடவும் அனைத்து மாவட்டங்களின் தொழிற்சங்கத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம் என தொழிற்சங்கங்கள் விடுத்த இந்த அறிக்கையில் மு.சண்முகம் முன்னாள் எம்.பி., க.அ.ராஜாஸ்ரீதர், ம.இராதாகிரு ஷ்ணன், எஸ்.கண்ணன், டி.வி.சேவியர், சொ.இரணியப்பன், அ.சேக்கிழார், ஆர்.சம்பத், இரா.அந்திரிதாஸ், க.பேரறிவாளன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் - காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் எம்.பி., தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்**



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 14.04.2026 | ஈரோடு தெற்கு | ஈரோடு மேற்கு |
| | ஈரோடு மத்திய | பெருந்துறை |
| | கோவை வடக்கு | மேட்டுப்பாளையம் |
| | கோவை மாநகர் | கோவை வடக்கு |
| | கோவை தெற்கு | சூலூர் |
| 15.04.2026 | மதுரை மாநகர் | மதுரை வடக்கு |
| | | மதுரை மத்திய |
| | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் |
| | | திருமங்கலம் |
| | மதுரை வடக்கு | மதுரை மேற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்**



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 10.4.2026 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிபாடி |
| 11.4.2026 | விழுப்புரம் மத்திய | வானூர் (தனி) |
| | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி |
| 12.4.2026 | காஞ்சிபுரம் தெற்கு | மதுராந்தகம் (தனி) |
| 13.4.2026 | காஞ்சிபுரம் வடக்கு | செங்கல்பட்டு |
| 14.4.2026 | திருவள்ளூர் கிழக்கு | கும்மிடிப்பூண்டி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்**



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 11.04.2026 | திருவள்ளூர் | பூவிருந்தவல்லி |
| 12.04.2026 | காஞ்சிபுரம் வடக்கு | செங்கல்பட்டு |
| 13.04.2026 | திருவண்ணாமலை | வந்தவாசி |
| | | செங்கம் |
| 14.04.2026 | வேலூர் | கீழ்வைத்தினான்குப்பம் |
| 16.04.2026 | சென்னை கிழக்கு | எழும்பூர் |
| | | துறைமுகம் |
| | | திரு.வி.க.நகர் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.





மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் கழக வேட்பாளர் செந்தில்நாதன் கஸ்பாபேட்டை ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இளம்பரிதி

**ஏப்ரல் 10 (1995)**



பழம்பெரும் இயக்கத் தோழர், சென்னை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்.

"சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்து அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றைக்கும் மறக்கக்கூடியவை அல்ல! தமிழகம் முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் சுற்றுப்பயணம் செய்து இந்த இயக்கத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தியவர்" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1988ஆம் ஆண்டு முப்பெரும் விழாவின்போது தலைமைக் கழகச் சார்பில் பெரியார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**